**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்**

**முன்னிலை:- திரு எஸ்.பிரபா சந்திரன், B.L.,**

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்**

**2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 5 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் வைகாசி மாதம் 22 ம் தேதி)**

**I.A.No.1/2026 in O.S.No.69/2026**

**(CNR No.TNNM01-000352-2026)**

துரைசாமி ..... மனுதாரர்/வாதி

-எதிராக-

தேவகி .....எதிர்மனுதாரர்/பிரிதிவாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு 5.6.2026 ம் தேதியான இன்று கொண்டுவரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.செந்தில் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சக்கரவர்த்தி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்...

**உத்தரவு**

இம்மனுவானது, எதிர்மனுதாரர் தாவா தொகைக்கு பிணையம் தாக்கல் செய்ய உத்திரவு பிறப்பித்தும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுவில் கண்ட சொத்துக்களை யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கி, திருச்சி ரோடு, நாமக்கல் கிளையில் பெற்றுள்ள அடமான கடனை உட்படுத்தி தீர்ப்புக்கு முன்னர் உடன் ஜப்தி செய்து உத்திரவிட வேண்டி கட்டளை 38 விதி 5 சி.பி.சி-யின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது புரோநோட்டுபடி மனுதாரருக்கு வரவேண்டிய கடன் தொகையினை வசூல் செய்ய தாவா தாக்கல் செய்துள்ளார். மனு சொத்துக்கள் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தகப்பனாரான நடராஜனுக்கு 16.4.1991 தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணப்படி பூர்வீகமாய்

பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி நடராஜனுக்கு எதிர்மனுதாரர் மகள் என்ற முறையிலும், எதிர்மனுதாரரின் தாயாரான பாப்பாத்தி மனைவி என்ற முறையிலும் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். மனு சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் மேற்படி சொத்தில் எதிர்மனுதாரருக்கும் அவருடைய தகப்பனாருக்கும் தலா 4ல் 2 பங்கு பாத்தியம் ஏற்பட்டு இருந்தது. எதிர்மனுதாரரின் தகப்பனார் கடந்த 25.11.2013 தேதியில் காலமாகிவிட்டார். பின்னிட்டு மனு சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு 4ல் 3 பங்கும் அவருடைய தாயாரான பாப்பாத்திக்கு 4ல் 1 பங்கும் பங்கு பாத்தியம் ஏற்பட்டுள்ளது. மனுதாரரிடமும் இதரர்களிடமும் பெற்ற கடன் தொகையினை ஏமாற்றும் கெட்ட எண்ணத்துடன் செயல்பட்டு மனு சொத்தில் எதிர்மனுதாரருக்குண்டான 4ல் 3 பங்கினை நாமக்கல் தாலுக்கா, சேந்தமங்கலம் கிராமம், மெயின்ரோடு, ஜி.பி.ரைஸ் மில், க.எண்.444ல் வசிக்கும பெரியண்ணகவுண்டர் மகன் ஜி.பி.வரதராஜன் என்பவருக்கு நிபமான கிரைய ஆவணம் ஏற்படுத்தி வைக்க ஏற்பாடு செய்து வரும் விசயமானது மனுதாரருக்கு நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பழையபாளையம் அஞ்சல், கிழக்கு வீதி, க.எண.3/75ல் வசிக்கும் முத்துசாமி மகன் கந்தசாமி என்பவர் மூலம் தெரிய வந்தது. எதிர்மனுதாரர் மேற்படி வீதம் கிரையம் செய்து வைக்கும் பட்சத்தில் மனுதாரரால் தாவா கடன் தொகையினை வசூல் செய்ய இயலாமல் போய்விடும். மேலும் எதிர்மனுதாரருக்கு மனுவில் கண்ட சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை. எனவே தாவா தொகைக்கு தகுந்த பிணையம் கொடுக்கும்படி கேட்டு மேற்படியார் தகுந்த பிணையம் கொடுக்க தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை தாவா தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்ய வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4) மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

5) **மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதை தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.**

**தீர்வு—**

6) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, மனுதாரர் அசல்

வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கை பிரதிவாதிக்கு எதிராக புரோநோட்டு படி தொகை கிடைக்கக் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மனு சொத்துக்கள் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் மேற்படி சொத்தில் எதிர்மனுதாரருக்கும், அவருடைய தகப்பனாருக்கும் தலா 4 ல் 2 பங்கு பங்கு பாத்தியம் ஏற்பட்டு இருந்ததாகவும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தகப்பனார் கடந்த 25.11.2013 தேதியில் காலமாகவிட்டார் என்றும், பின்னிட்டு மனு சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு 4 ல் 3 பங்கும் அவருடைய தாயாரான பாப்பாத்திக்கு 4 ல் 1 பங்கும் பங்கு பாத்தியம் ஏற்பட்டுள்ளதாகவும், கடன் தொகையினை ஏமாற்றும் நோக்கத்தில் எதிர்மனுதாரருக்குண்டான 4 ல் 3 பங்கினை நாமக்கல் தாலுக்கா, சேந்தமங்கலம் கிராமம், மெயின்ரோடு, ஜி.பி.ரைஸ் மில், க.எண்.444 ல் வசிக்கும் பெரியண்ணகவுண்டர் மகன் ஜி.பி.வரதராஜன் என்பவருக்கு நிபமான கிரைய ஆவணம் ஏற்படுத்தி வைக்க ஏற்பாடு செய்துவரும் விசயமானது மனுதாரருக்கு நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பழையபாளையம் அஞ்சல், கிழக்கு வீதி, க.எண்.3/75 ல் வசிக்கும் முத்துசாமி மகன் கந்தசாமி என்பவர் மூலம் தெரிய வந்ததாகவும், எதிர்மனுதாரர் மேற்படி வீதம் மனுவில் கண்ட சொத்தை விற்பனை செய்துவிட்டால் மனுதாரரால் தாவா கடன் தொகையினை வசூல் செய்ய இயலாமல் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்பட்டுவிடும் என்றும், மேலும் மனுதாரருக்கு தெரிந்தவரை எதிர்மனுதாரருக்கு மனு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றும், எனவே தாவா கடனுக்கு தக்க பிணையம் கொடுக்கும்படி கேட்டு மேற்படியார் தகுந்த பிணையம் கொடுக்க தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை தாவா தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்ய வேண்டுமென்றும் மனு அனுமதிக்கப்பட வேண்டுமென வாதிட்டார்.

7) மனுதாரர் தரப்பில் அசல் வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 24.1.2024 ம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசலை பரிசீலிக்கின்றபோது மனுதாரரிடமிருந்து எதிர்மனுதாரர் ரூ.12,00,000/-த்தை கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.50 வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு மனுதாரர் பெயருக்கு எதிர்மனுதாரர் தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்துள்ளது போல் உள்ளது என்பது தெரிய வருகிறது.

8) மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள 3ம் தரப்பினரான நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பழையபாளையம் அஞ்சல், கிழக்கு வீதி, கதவு எண்.3/75ல் வசிக்கும் முத்துசாமி மகன் கந்தசாமி என்பவரின் நிரூபண வாக்குமூலத்திலும், எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை எதிர்மனுதாரர் நாமக்கல் தாலுக்கா, சேந்தமங்கலம் கிராமம், மெயின் ரோடு, ஜி.பி.ரைஸ் மில், கதவு எண்.444ல் வசிக்கும் பெரியண்ணகவுண்டர் மகன் ஜி.பி.வரதராஜன் என்பவருக்கு நிபமாக கிரையம் செய்து வைக்க ஏற்பாடு செய்து வரும் விசயத்தை வாதியிடம் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 16.4.1991ம் ம் தேதியிட்ட எதிர்மனுதாரரின் தகப்பனார் மற்றும் ஒரு செல்லம்மாள், பழனியாண்டி ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை பரிசீலித்து பார்க்கின்றபோது பாகப்பிரிவினையில் கண்ட பி ஜாபிதா சொத்தான மனு சொத்துக்கள் எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழ் கணிணி பதிவிறக்க நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 8.9.2000ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் கணிணி பதிவிறக்க நகலில் பிரதிவாதியின் தந்தையாரான நடராஜன் என்பவர் இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்துடன் மேற்படி நடராஜனின் இறப்பு சான்றிதழ் நகலும், வாரிசு சான்றிதழ் நகலும் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதியின் தந்தையாரான நடராஜன் கடந்த 25.11.2013 அன்று இறந்துள்ளார் என்பதும், அவருக்கு இந்த பிரதிவாதி மகள் என்பதும், பாப்பாத்தி என்பவர் மனைவி என்பதும் தெரிய வருகிறது. ஆகவே மேற்படி நடராஜனுக்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்களான மனு சொத்துக்களில் பிரதிவாதிக்கு 3/4 பாகமும், பிரதிவாதியின் தாயாரான பாப்பாத்தி என்பவருக்கு 1/4 பாகமும் பாத்தியமானது என்பது மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது.

9) மனுதாரர் மற்றும் 3ம்தரப்பினர் பிரமாண வாக்குமூலத்தை பரிசீலிக்கின்றபோது, இந்த மனுதாரரின் தாவா கடனை ஏமாற்றும் நோக்கத்தோடு, எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை விற்பனை செய்ய எதிர்மனுதாரர் முயற்சித்து வருகிறார் என்பதும், இம்மனுவில் சொல்லப்பட்டுள்ளது போல் எதிர்மனுதாரர் மனு

சொத்துக்களை விற்பனை செய்துவிட்டால், அசல் வழக்கில் பின்னிட்டு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும் பட்சத்தில் அதனை நிறைவேற்றி தொகையை வசூல் செய்ய இயலாத நிலை ஏற்படுமென மனுதாரர் தரப்பில் முன் வைக்கப்படும் வாதம் ஏற்கத்தக்கதாகவே உள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் மனு சொத்துக்கள் நாமக்கல் யூனியன் பேங்க் ஆப் இண்டியா வங்கி கிளையில் அடமானம் வைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதனை நிரூபணம் செய்ய மனுதாரர் தரப்பில் யாதொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. இருந்தபோதிலும் இம்மனுவுடன் தாக்கல்செய்யப்பட்டுள்ள வில்லங்க சான்றிதழை பரிசீலித்து பார்க்கின்றபோது மனு சொத்துக்கள் The Catholic Syrian Bank Ltd., Namakkal Branch having its Head Office at Thrissur and its Branch at -782, A-1, RSR Complex, Salem Main Road, Namakkal 637 001, வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடமான பத்திரத்தின் நகலை காண்கின்றபோது மனு சொத்துகளில் ச.எண்.105/9, 249/1, 106/1 ஏ, 64/3, 64/4 மற்றும் 119/2 ஆகிய சொத்துக்களை பொருத்து கடந்த 10.12.2020 அன்று நாமக்கல்லில் உள்ள The Catholic Syrian Bank Ltd., Namakkal Branch having its Head Office at Thrissur and its Branch at -782, A-1, RSR Complex, Salem Main Road, Namakkal 637 001, வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்பது தெரிய வருகிறது. ஆகவே, மனுதாரருக்கு முதல்நோக்கு வழக்கு உள்ளதாலும், எதிர்மனுதாரர் மனு சொத்தை பராதீனம் செய்ய முயற்சிக்கிறார் என்பது தெளிவாக தெரிய வருவதாலும், அவ்வாறு பராதீனம் செய்தால் பின்னிட்டு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும் பட்சத்தில் தாவா தொகையை வசூல் செய்ய இயலாத நிலை ஏற்படும் என்பதாலும், எதிர்மனுதாரர் undertaking affidavit தாக்கல் செய்துள்ளபோதிலும், அத்துடன் மேற்படி சொத்திற்கான அசல் ஆவணத்தை எதிர்மனுதாரர் ஒப்படைக்கவில்லை என்பதாலும், ஆகவே எதிர்மனுதாரர் முறையாக security furnish செய்யாததாலும், நீதியின் நலன் கருதியும், மனு சொத்துக்களை மேற்படி வங்கியின் அடமான கடனுக்கு உட்பட்டு தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்திரவிடப்பட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

10) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனு சொத்துக்களை The Catholic Syrian Bank Ltd., Namakkal Branch வங்கி அடமான கடனுக்கு உட்பட்டு தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்திரவிடப்படுகிறது. மனு சொத்துக்களை பற்றுகை செய்வதற்கு என்று 4.7.2026ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. ஒரு வாரக்காலத்திற்குள் படி மெமோ செலுத்த வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 5– ஆம் நாளான இன்று அவையறிய பகரப்படுகிறது.

sd/–S.Prabha Chandran

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.</u>**
**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.</u>**

sd/–S.Prabha Chandran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.